தனி இதழ்
[illegible]
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 121

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விகிதம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி 17உ திங்கள் (2—11—53) ☆ ☆ ☆ வெளியீடு: ஐப்பசி 18உ செவ்வாய் (3—11—53)

கல்வித் திட்டம்—நீதிபதி கண்டனம்!

பிரிட்டன், அமெரிக்க கட்டாயக் கல்வியின் குறிக்கோளையே நாம் அறிந்தபாடில்லை

ஆச்சாரியார் திட்டத்தில் மாணவச் சிறுமிகளின் தொழில் ஏற்பாடு?

வறுமை பிய்த்துத் தின்னும் ஆசிரியர்களிடம் 6 மணி உழைப்பை எதிர்பார்க்கலாமா?

சென்னை, நவ. 1—

"எத்தகையக் கல்வித் திட்டத்தை வேண்டுமானாலும் வெளியிட்டு விடுவது சுலபம்; ஆனால், அத்திட்டத்தில், ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ள அந்தஸ்தைப் பொறுத்துத்தான் எல்லாம் இருக்கிறது."

"சிறுவர்களின் தொழிற்பயிற்சியைப் பொறுத்தவரையில், அந்தந்தப் பகுதியில் உள்ள கைத்தொழில்களைக் கற்றுக்கொள்வதற்காக, பிள்ளைகளை வெளியில் செல்ல ஆசிரியர்கள் அனுமதிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், நமது கிராமங்களில் உள்ள கைத்தொழில்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதல்ல."

"பிரிட்டனிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் 18 வயது வரையில் ஒவ்வொருவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இங்கு இந்தியாவில், இதுபற்றி, கோபாலகிருஷ்ண கோகலே காலம் (1920) முதலும், தொடக்கக் கல்வித் திட்டம் செயலாற்ற முனைந்த கால முதலும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறோம். அந்தக் குறிக்கோளை நன்கு அறிந்துகொள்வதிலும்கூட மிகமிக தொலைவில் இருந்து வருகிறோம்."

—இவ்வாறு, சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசிய, உயர் நீதிமன்ற நீதிபதி பஷீர் அகமத் சையத் அவர்கள், புதிய கல்வித் திட்டத்தைக் குறித்துப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

மேலும், அவர் பேசும்பொழுது குறிப்பிட்ட சாரமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன:—

"புதிய திட்டத்தின் மூலம் 5 மணி நேரக் கல்விக்குப் பதில், 3 மணி நேரக் கல்வி போதும் என்று பிரதம மந்திரி நினைப்பதுபோல் தெரிகிறது. இப்பொழுதும்கூட ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களைக் கொண்டுள்ள பள்ளிகளில் உள்ள ஒரே ஆசிரியர், பல வகுப்பு மாணவர்களுக்கும் போதிப்பதினால், குறைந்த கால அளவு கல்வியைத்தான் குறிப்பிட்ட ஒவ்வொரு வகுப்பு மாணவர்கள் இப்பொழுதும் பெறுகிறார்கள் என்றும், தொடக்கப் பள்ளிகளில் இப்பொழுதும் ஐந்து மணி நேரமும் பாடம் சொல்லிக் தருவது கிடையாது என்றும், இந்தப் புதிய குறைந்த கால அளவு கல்வி போதனைக்கு ஆதாரங்களாகக் காட்டலாம்."

"இந்தக் கண்கொண்டு பார்க்குங்கால், போதனை கால அளவைக் குறைத்து விடுவதால், போதனையின் அளவும், தரமும் பெரிய அளவில்பாதகமடையாது என்று வாதிட்டாலும் வாதிடக்கூடும்"

"ஆனால், இதிலிருந்து, இயற்கையாகக் கிளம்புகின்ற வினா என்னவென்றால், சிறுவர்கள் விரும்பி ஏற்குமாறும், சிறந்த பயனளிக்குமாறும், மூன்று மணி நேர போதனையை உருவாக்க அவர்கள் இருக்கிறார்களா என்பதாகும். ஒரே ஆசிரியரைக் கொண்ட பள்ளிகள் மாற்றப்பட்டு பல ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இதனால், மூன்று மணி நேரமும் எந்தா நல்ல முறையில் செலவிடப்படக்கூடும்."

"இப்போதுள்ள போதகாசிரியர்களைக்கொண்டு, புதிய திட்டத்தின் குறிக்கோளில் வெற்றி காண முடியாது."

"இப்போதுள்ள ஆசிரியர்கள் எண்ணிக்கையை இரட்டிப்பாக ஆக்கினால் அல்லாது, மாணவச் சிறுவர்கள் ஏதாவது

(8-ம் பக்கம் பார்க்க)

'அகில பாரத்' அம்பலமாகிறது!

கன்னட மாநிலப் பிரிவினைக்கு நேருவின் உறுதிமொழி

ஹூப்ளி, அக் 30—

கன்னட மாநில அமைப்பு சம்பந்தமாக மத்திய சர்க்காரின் போக்கு மாறியிருப்பது குறித்து, இன்றிரவு, கன்னட மாநில காங்கிரஸ் கமிட்டி, அதன் கமிட்டிக் கூட்டத்தில் திருப்தி தெரிவித்தது.

இதுபற்றி தோழர் நிஜலிங்கப்பாவுக்கு, பண்டித நேரு எழுதியிருக்கும் கடிதத்தில், கன்னட மாநில அமைப்பை விரைவில் நிறைவேற்றுவதாக உறுதியளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எனவே, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானித்திருந்த காங்கிரஸ் கமிட்டி அவைகளை மேற்கொள்ள வேண்டாமென நிறுத்தி வைத்துள்ளது.

பண்டிதர் வீட்டுமுன் பட்டினிப் போர்!

நோன்பிருக்க வந்தவர் கைது

புதுடில்லி, நவ 2—

பஞ்சாபி பேசும் மாநிலம் கோரி பண்டித நேருவின் இல்லத்தின் முன் பட்டினிப் போர் இருக்கப் போவதாக அறிவித்திருந்த 'பெப்சு' சிரோமணி அகாலிதள தலைவர்கள் ஜதேதார், சம்பூரண்சிங், ராமன் சேர்த்த காலை டெல்லி அருகிலுள்ள கரோல் ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார். அவருடன் மற்றும் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இலட்சுமணபுரியில் மாணவர்களின் 'ஆகஸ்டுத்தனம்'

தந்திக்கம்பிகள் துண்டிக்கப்பட்டன; தபால் நிலையம் கொளுத்தப்பட்டது

துப்பாக்கிப் பிரயோகத்தில் பலருக்குக் காயம்

இலட்சுமணபுரி, அக். 31—

மாணவர்-போலீசார் மோதல் காரணமாக சிலமை கட்டுமீறிய தால் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பலமுறை கண்ணீர்ப் புகை; தடியடிப் பிரயோகம் செய்தனர். இதில் ஒரு ரிக்ஷாக்காரர் கொல்லப்பட்டார். 60 பேருக்குக் காயமேற்பட்டது.

பல்கலைக் கழக எல்லைக்குள் நுழைய எத்தனித்த முன்னேறி வந்த மாணவர்களை குதிரை மீதேறிய போலீசார், தடுத்து நிறுத்த மிகவும் முயற்சித்தனர். பட்டினி நோன்பை மேற்கொண்டிருந்த இரு மாணவர்களை, போலீசார் சிகிச்சை நிலையத்திற்கு இட்டுச் சென்றதாலும், 100க்கு மேற்பட்ட மாணவர்களைக் கைது செய்ததாலுமே இந்தக் கிளர்ச்சி உச்சம் பெற்றது என சொல்லப்படுகிறது.

மாலையில், போலீசாருக்கும் மாணவர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. ஆறு அரசாங்க பஸ்கள் நிக்கிரையாயின. ஒரு போஸ்ட் ஆபீஸ், மற்றும் சில பொருள்கள் கொளுத்தப்பட்டன. தெரு விளக்குகள் உடைத்தெறியப்பட்டன. டெலிபோன் கம்பிகளும் அறுத்தெறியப்பட்டன. இராணுவத்தினர் தாக்கப்பட்டனர்.

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப் பின, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

ஐனாபாத் என்ற இடத்தில் போலீசாருக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் மறுபடியும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 41 பேர் காயமடைந்தனர். அவர்களில் 14 பேர் மாணவர்கள். டி. எஸ்.பி-க்கும் காயமேற்பட்டது. இன்று காலை திறக்கப்பட்ட பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டன. தடை உத்தரவு அமுலிலிருந்தும், 3000-த்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கவுன்சில் மாளிகை முன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

முதலமைச்சர் பந்த், சக மந்திரிகளுடன், நகரில் சுற்றிப் பார்த்தார். பி.-சோ. தலைவர்கள் திரிலோக சிங், இதர பிரமுகர்களும் சமாதானம் செய்விக்க முயல்கின்றனர். நகரின் சினிமா கொட்டகைகள் மூடப்பட்டன.

ரூ. 40 அபராதம்; தவறினால் 19 நாள் சிறைவாசம்

சென்னை தோழர்கள் சிறைபுகுந்தனர்

சென்னை, அக் 31—

13—10—53ல், தண்டையார்பேட்டை 43-வது வட்ட தி. மு. கழக சார்பில், மீர்சாகிப்பேட்டையில் கூட்டம் நடத்திய தோழர்கள் டி. ஏ. வெங்கிடாசலம், டி. ஏ. துரை; மா. பொ. வேதாசலம், சி. கன்னியப்பன், சி. பூபதி ஆகியோர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த 3-வது மாகாண நீதிபதி நகர போலீஸ் விதி 41-வது பிரிவுப் படி, ரூ 30 அபராதமும், கட்டத் தவறினால் 2 வார வெறுங்காவல் தண்டனையும், நகர போலீஸ் விதி, 71-வது பிரிவுப் படி ரூ. 10 அபராதமும், கட்டத் தவறினால் 5 நாள் வெறுங்காவல் தண்டனையும் விதித்தார். தோழர்கள் டி. ஏ. வெங்கிடாசலம், டி. ஏ. துரை, கன்னியப்பன், பூபதி ஆகியோர் அபராதம் கட்ட மறுத்து மகிழ்ச்சியுடன் சிறை புகுந்தனர்.

குறிப்பு:—தோழர் வேதாசலத்திற்கு இன்றுவரை சம்மன் கொடுக்கப்படாததால், வழக்கு விசாரணையின்போது வரவில்லை. எனவே, நீதிபதி மற்ற நால்வர் மீதிருந்த வழக்கைமட்டும் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

வழக்கு விசாரணை முடிவுற்றபிறகு தோழர் வேதாசலம் நீதிபதியின் முன் சென்று, தனக்குச் சம்மன் கொடுக்கப்படாமலே வழக்குப் பதிவானது பற்றிக் கேட்டார்.

"கொடுப்பதற்குச் சென்று தேடினோம்; ஆள் அகப்படவில்லை" என்று வழக்கு விசாரணைக்கு வந்திருந்த போலீஸ்காரர் கூறிய செய்தியை மறுத்ததின் பேரில், மறுநாள் இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சம்மனை வாங்கிக்கொண்டு, திங்கட்கிழமை கோர்ட்டிற்கு அவரை வரும்படி நீதிபதி கூறினார்.

★

37வது வட்ட தோழர்கள்

சென்னை இராயப்பேட்டை தி. மு. கழக 37-வது வட்ட சார்பில் 21—9—53-ல், கண்டனக் கூட்டம் நடத்திய தோழர்கள் த. வெற்றிவீரன், ம. கி. இராமலிங்கம், பொ. நா. சண்முகம், கெ. கிருஷ்ணமூர்த்தி, வி. கன். கண்ணன் (பாண்டியன் பகுத்தறிவு கழகத்தைச் சேர்ந்தவர்) மு. தாஸ், பி. நாகராசன், ஏ. செல்வம் ஆகிய 8 தோழர்களின் வழக்கை 4-வது முறையாக 31-10-53ல், சைதாப்பேட்டை 3-வது மாகாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, நகர போலீஸ் 41-வது விதியின்படி ரூ 30 அபராதமும், கட்டத் தவறினால் 2 வாரம் வெறுங்காவல் தண்டனையும், நகர போலீஸ் 71-வது விதிப்படி ரூ 10 அபராதமும் கட்டத் தவறினால் 5 நாள் வெறுங்காவல் தண்டனையும்விதித்து தீர்ப்பளித்தார். தோழர்கள் அனைவரும் புன்முறுவலோடு சிறைக்கோட்டம் புகுந்தனர்.

★

மதுரை தோழர்கள் வழக்கு

★

மதுரை, அக் 29—

மதுரை மீனாட்சி மில் அருகேயுள்ள வ.உ.சி.படிப்பகத் தோழர்கள் கோவிந்தன், பாண்டி, பிச்சை, சங்கையா, கந்தசாமி, கண்ணன், அழகர், பெருமாள் ஆகியோர் மீது போடப்பட்டுள்ள வழக்கு, இன்று, அடிஷனல் முதல் வகுப்பு நீதிபதி எம். தேவசகாயம் அவர்கள் முன்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.

போலீசாரால் குற்றப் பத்திரிகை இன்னும் தாக்கல் செய்யப்படவில்லையாதலால், சம்மன் பிறப்பிக்கும்போது ஆஜராகும்படி உத்திரவிடப்பட்டது.

• • •

மதுரை, அக். 30—

இன்று காலை, மதுரை முதல் வகுப்பு பெஞ்ச் கோர்ட்டில், தோழர்கள் சண்முகசுந்தரம், கடற்கரை, ஜோதி ஆகிய மூவர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கில், டவுன் தரப்பு சாட்சி விசாரிக்கப்பட்டபின், வக்கீல் தனது வாதத்தில் மூவரும் நிரபராதிகள் என்பதற்குரிய காரணங்களை விளக்கினார்.

தீர்ப்பு 13-11-53-க்கு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஐவர் சிறையில் இன்று 63-வது நாள்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 2—11—1953 திங்கள்

விடாகண்டர்!

கனம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் சென்னை மாநில சர்க்கார் முதல் அமைச்சர் என்ற முறையில், இந்த நாட்டு மக்களின் எதிர்காலக் கல்விக்கு உலைவைக்க, மக்களாட்சி முறைக்கு முரண்பாடாக உருவாக்கி, நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள கல்வித் திட்டத்தை, நாட்டில் உள்ள கல்விலாளர் பலரும் பயமின்றி, கடுமையாகவும் கண்டித்துள்ளார்கள். நமது தி.மு. கழகத் தலைவர்களும், மற்றவர்கள் கண்டித்ததைக் காட்டிலும் தீவிரமாகவும், கண்டனம் தெரிவித்தவர்கள் கூறியதைக் காட்டிலும் மேலும் விளக்கமாகவும், கண்டித்தும், விளக்கியும் வந்திருக்கிறார்கள். உலகச் சண்டையிட்டதோடு, உலகநாட்டு நடைமுறைகளைக் கண்டு பணிவுடையதாகச் சொல்லிக்கொள்ளும் ஜனசக்தி கூட "சகல முறைகளிலும் பாதகமானதும், பிற்போக்கானதுமான ஜாதீயத் தொழில் முறைகளை—வர்ணாசிரம தர்மத்தை—நீடிக்கச் செய்யும் இந்தக் கல்வித் திட்டத்தை, சென்னை சர்க்கார் கைவிட வேண்டுமென்று மாகாணமெங்கும் பலத்த கிளர்ச்சியில் மக்கள் இறங்கவேண்டும்" என்று அறைகூவல் விடுத்துள்ளது என்றால், ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் மிகமிகப் பிற்போக்கானது, மக்களை குருட்டு இருட்டறையில் தள்ளக்கூடியது, இன்றைய சிறார்களை நிரட்சரகுட்சிகளாக்கும் கேட்டினை உள்ளடக்கியது என்று நமது தி.மு. கழகம் முடிவு கட்டியதில் எவர்தான் குறை காண முடிந்தவர்?

மற்றவர், கூறினர். கழகத்தோழர்களோ போர் வக்காலத்து வாங்கிப் பேசினர்; வருணாசிரமத் திட்டத்தை எதிர்த்தனர்; ஜாதித் தொழில் முறைகளை நீடிக்கச் செய்யும் என்று கண்டித்தனர்; அத்துடன் நின்றனர்.

நமது தி.மு. கழகம், கண்டனம் தெரிவித்துக்கொண்ட தோடு, கடமை தொலைந்துவிட்டதாக மனச்சமாதி கொண்டு விடவில்லை. போர்—போர்—என்று அறப் போர்க்களம் புகுந்தது, நமது தி.மு. கழகம்.

காந்தி வழி வந்த சாந்த சொரூபி ஓங்காரநாதன் திட்டத்தின் தலைமை எடுத்துக் காட்டுகிறார்; தமது பணி முடிந்ததென ஓய்கிறார். இராஜாஜியைத் தாருங்கள் தான் விளக்கம் தந்தார்; பட்டத்து கடமை என்ற வழக்கமான வேலைக்குத் திரும்பிவிட்டார். இந்தப் போக்கிலே நமது கழகம் நடைமுறையை வகுத்துக்கொள்ளவில்லை. நேரடி நடவடிக்கையை, அமைதியான நடைமுறை மூலம் மேற்கொண்டு ஒழுகியது, இன்றைய வரலாற்றுச் சம்பவமாக நிலைத்துவிட்டது.

கழகத் தலைவர்கள் சிறைபட்டனர். இன்னும் சிறையிலேயே உள்ளனர். பல நூறு கழகத் தோழர்கள், ஆச்சாரியார் எவ்வித நாசத்திற்கு ஆளாகி மீண்டும் நமது நாட்டு விடுதலைப் பணி புரிய.

எழுதினால், கற்றவர் மட்டுமே தெரிவர், ஒரு விஷயத்தைப் பேசினால், அப்பொழுது கேட்டவர் மட்டுமே கருத்துப் பெறுவர். அறப்போர்க்களத்திலே, ஆச்சாரியாரின் கொடுமையையும், தியாகிகளின் துணிவையும் தாங்கிக்கொண்டு, பெரும் இன்னல் பலவற்றைச் சகிப்போர் முன்வரும்பொழுது, அந்தப் பலன் கருத்தைச் சிறந்த பணியினால் கல்லாதோர், கேட்காதோர் பட்டியலில் உள்ள நாட்டு மக்களில் பல்லோர், எதிர்க்கும் திட்டத்தின் பயங்கர விளைவுகளையும் புரிந்து கொள்ளுவர். ஒழித்துக்கட்டியே ஆகவேண்டும் என்ற உறுதியும் பெறுவர். இந்தத் துறையில் கஷ்ட நஷ்டம் ஏதும் அஞ்சாமல், அறப் போர்க்களம் கண்ட பெருமை, நமது தி.மு. கழகத்திற்கே உரியதாகும். கடமையைச் செய்தோம்; அதுவும், கள்ளக்கபடமின்றி நடந்தோம் என்பதிலே, தி.மு. கழகத்தவர் பூரிப்படைவர்; பெருமை கொள்ளுவர். நிற்க,

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டத்தில், சிலபல குறைபாடுகள் இருக்கிறதாகக் கண்டார்; அவைகளை ஒளிவு மறைவு இல்லாமல் விண்டார். அதை, இதே இதழில் விளக்கமாக வெளியிட்டு இருக்கிறோம். கருத்தூன்றி வாசிக்க வேண்டும் அவர் சுட்டிக் காட்டியுள்ள, புதிய கல்வித் திட்டத்தில் ஆரம்ப ஆசிரியர்கள்மீது சுமத்தப் பட்டுள்ள வேலைச் சுமையை.

ஆச்சாரியார் திட்டம் வெற்றிபெற இன்றுள்ளதுபோல் மேலும் இரண்டு பங்கு ஆசிரியர்கள் தேவைப்படும் என்கிறார் நீதிபதி. கிராமத்திலே இருக்கும் கைத்தொழில்கள் எண்ணிக்கையில் குறைவாகத்தானே இருக்கின்றன என்று வினவுகிறார். என்ன பொருள் இதற்கு? ஒரு கிராமப் பள்ளியில் படிக்கும் அத்தனை மாணவர்களுமா, அந்த இரண்டு மூன்று கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிக்காமல் குறிக்கிறார் நீதிபதி. பிரதம ஆச்சாரியார் காதில், இந்த அறிவுரை ஏறவா போகிறது? அவர்தான் 'விடாகண்டர்' ஆயிற்றே!

'நான் பிறர் பேச்சைக் கேட்கின்ற வழக்கமே கிடையாது. நான் பிடித்ததைத்தான் இறுதி வரையில் சாதிப்பேன்' என்று ஆச்சாரியாரே, சில நாளைக்கு முன்பு கூறி இருக்கிறார். எனவே, நீதிபதியின் பேச்சை மட்டும் இந்த 'விடாகண்டர்' ஏன மதிக்கப்போகிறார்?

ஆச்சாரியாரை அந்தக் காலத்தில் சந்திரிக்கடித்த டாக்டர் வரதராஜுலு இன்று அறைகூவல் விடுக்கிறார்!

விட்ட இடத்தில் இருந்து தன்மானப் போர் தொடுக்க டாக்டர் தயாரா?

உறங்கிக்கிடந்த சிங்கத்தின் வாலை முறுக்கி வாட்டிக்கொண்டிருக்கிறது சி. ஆர். கும்பல்

இத்திங்கள் 14-ம் நாள், சென்னை சட்டசபை கூட இருக்கிறது. அதற்கு முன்பாக சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட்டம் கூட இருக்கிறது. அக்கூட்டம் ஒரு கொந்தளிப்பான கூட்டமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சி. ஆர் மீது உறுப்பினர்களால் சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து நடக்கவிருக்கும் காரசாரமான விவாதமே இந்தக் கொந்தளிப்புக்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

பிரதமர் நேருவுக்கு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் கையெழுத்துப் பெற்று, டாக்டர் வரதராஜுலு அவர்களால் அனுப்பிய வேண்டுகோளுக்கு நேருவிடம் இருந்து பதில் கிடைத்திருக்கிறது.

அதுபற்றி, டாக்டர் விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:—

"நானும், சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் கையெழுத்திட்டு அனுப்பின வேண்டுகோளுக்கு, பிரதமர் நேருவிடமிருந்து இரகசியமான பதில் ஒன்று கிடைத்திருக்கிறது. இந்த வேண்டுகோளில் அடங்கியுள்ள பொருள் விவாதத்திற்காக கட்சிக் கூட்டத்தில் மட்டுமே வைக்கக் கூடியதாகையால் இந்தக் காலகட்டத்தில் அதைச் செய்தியாக்குவது கூடாது."

"அப் பதில் கடிதத்தின் சில பகுதிகள், செய்தித் தாள்களில் வெளியாகியுள்ளது கண்டு வருந்துகிறேன். இச்சில பகுதிகளை வெளியிடுவதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள், கட்சிக்கு மட்டுமே அல்லாமல் மாநில காங்கிரஸ் சர்க்காருக்கும் கேடு செய்ய முடியாத கேட்டினை விளைவித்தவர்களாகிறார்கள். காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் கூட்டத்தில், விஷயத்தை முழு அளவில் விவாதிக்கின்றபொழுது, பெரும்பாலானவர்கள், விஷயத்தை உண்மை உருவில் காணுவார்கள்."

"மறுப்பே கிடையாது என்ற திடநம்பிக்கையுடன், பிரதம (நேரு) மந்திரிக்கு அனுப்பிய வேண்டுகோள் பெரும்பான்மை உறுப்பினர்களின் உள்ளக்கிடக்கையே ஆகும் என்று உறுதியாக கூறுகிறேன். இதை, சாலக் கண்டிப்பாக மெய்ப்பிக்கும் நாட்டின் பெரும் நன்மையைக் கெடுத்துவிடக்கூடாது— இதுபற்றிய பத்திரிகை விவாதத்தில் நான், இத்தருணத்தில் பங்கு கொள்ள விரும்பவில்லை."

டாக்டர் வரதராஜுலு விடுத்துள்ள பத்திரிகைச் செய்தி இதுதான்.

செகண்டரி கல்வி கமிஷன் அறிக்கை

ஆலோசனை போர்டு பரிசீலனை செய்யும்

சென்னை, அக் 31—

"செகண்டரி கல்விக் கமிஷன் ரிப்போர்ட்டை, மாநில கல்வி ஆலோசனை போர்டு நவம்பர் 9-ந் தேதி வரை புதுடில்லியில் கூடும் போது பரிசீலனை செய்யும்". என்று அக்கமிஷன் தலைவர், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் கூறியுள்ளார்.

செகண்டரி கல்வி சீர்திருத்தம் பற்றி யோசனை கூற நியமிக்கப்பட்ட கமிஷன், வெளியிட்டுள்ள முக்கிய சிபார்சுகளில் ஒன்று செகண்டரி கல்வியில், தாய்மொழி மூலமே பாடம் போதிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

வேலையற்றோர் தொகை வளருகிறது

2000 டாக்டர்கள் சோம்பிக் கிடக்கிறார்கள்

கல்கத்தா, நவ. 1—

மேற்கு வங்கத்தில் ஊழியம் புரிவதற்கான வாய்ப்பு பெறாமல், 2000 பட்டம் பெற்ற ஆங்கில மருத்துவர்கள் சோம்பிக் கிடக்கிறார்கள் என்று, இந்திய மருத்துவக் கழகம் நடத்திய ஆராய்ச்சியில் இருந்து தெரியவருகிறது.

பணம் கொடுத்து மருத்துவம் செய்துகொள்ள முடியாத நிலையில் மக்களுக்குள்ள வறுமை, மருத்துவர்களிடையேயுள்ள பணக்கஷ்டம், மருத்துவ இளைஞர்களின் வேலையில்லாத திண்டாட்டம் ஆகிய சீரழிவு, மேற்கு வங்காளம் முழுதும் பொதுவாகவும், கல்கத்தா தொழிற்சாலைப் பகுதிகளில் குறிப்பாகவும், தீவிரமாகப் பரவி வருவதாக மாநில கூட்டுச் செயலாளர் டாக்டர் மஜூம்தார் கூறுகிறார்.

மலேரிய காய்ச்சல் நீங்கலாக மற்ற தொத்து நோய்கள் வளர்ந்து வருகின்றன. மலேரியாவினால் மாநிலம் முழுதும் 1951-ம் ஆண்டில் இறந்தவர் தொகை 6,50,000 ஆகும். இந்த ஆண்டு, கல்கத்தாவில் மட்டும் விஷபேதிக்குப் பலியானவர் எண்ணிக்கை 2,000 ஆகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில சர்க்கார் புதிதாகத் திறந்துள்ள கிராம மருத்துவ நிலையங்கள் 160 தான். ஆனால் 2 000 நிலையங்களைத் திறக்கப் போவதாக சர்க்கார் முன்னர் உறுதி கூறியது.

காவிரி—கரை புரளுகிறது

திருச்சி, நவ 2—

காவிரியில், மீண்டும் தண்ணீர் கரை புரண்டோடுவதாகச் சொல்லப்படுகிறது. மேட்டூர் அணையில் எஞ்சியுள்ள தண்ணீர் வழிந்தோடுவதாலும், அமராவதி முதலிய உபநதிகள் நிறைய தண்ணீருடன் காவிரியில் வந்து கலப்பதாலும், பெருந்தளவு காவிரியில் தண்ணீர் ஓடிவருவதாகச் சொல்லப்படுகிறது.

இன்று காலை காவிரியில் 111 அடி தண்ணீர் ஓடுகிறது. கொள்ளிடத்தில் 7 அடி தண்ணீர் ஓடுகிறது. மேற்கொண்டு மழை பெய்தால், குடிசைகளுக்குச் சேதமேற்படலாமென தெரிய வருகிறது.

'மாவ் மாவ்' வேட்டை: 36 பேர் மாண்டனர்

லண்டன், நவ 1—

கென்யாவில், பயங்கரவாதிகளால் காயமடைந்துள்ள வெள்ளை போலீஸ் அதிகாரி ஒருவர் லண்டனில், 'மாவ் மாவ்' தலைவருக்கு ரேடியோ மூலம் விடுத்துள்ள செய்தியில், "அவரை உயிருடன் சிறை பிடிப்பது அல்லது கொல்வது—இதை செய்தே தீருவது நிச்சயம்," என்று சவால் விடுத்திருக்கிறார்.

'மாவ் மாவ்'களுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையில், 36 பேர் கொல்லப்பட்டனர்.

பி. வி. எத்திராஜ் காலமானார்

பக்த ராமதாஸ், மைனர்ராஜாமணி, சௌபாக்கியவதி, பரசுராமர் ஆகிய சினிமாப் படங்களும், மதுரை தேவி மனமோகன நாடக சபா, என். எஸ். கே. நாடக சபா, டி. கே. ஆர் ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபா மானேஜருமாயிருந்த பி. வி. எத்திராஜ் சில தினங்கள் உடல் நலமின்றி பண்ருட்டியில் 29—10—53 மாலை 6 மணிக்குக் காலமானார். மறுநாள் அடக்கம் நடந்தது. ஏராளமான நண்பர்களும், பக்தர்களும் வந்து அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். நமது அனுதாபத்தையும் வருத்தத்தையும் அவரது குடும்பத்தினருக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம். (பு—ர்)

திட்டக்குடியில் பொதுக் கூட்டம்

31—10—53 மாலை 6மணிக்கு வாணொலித் திடலில் தோழர் பி வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடந்தது. தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, பொன்னம்பலனார் மற்றும் பலர் பேசினர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி பேசுகையில்; காங்கிரஸ் காரர்கள் நாட்டில் நடத்தும் அராஜகத்தைப்பற்றியும், ஆச்சாரியார் ஆட்சியின் அநீதியைப் பற்றியும் வன்மையாகக் கண்டித்துப் பேசினார். (நிருபர்)

அய்யம்பேட்டையில் கவர்னர் பிரகாசா

போலீசார் போக்கிரகுக் கண்டனம்

அய்யம்பேட்டை, அக் 31—

தணடுவின பாங்கனில குறிப்பிட்ட இடத்தில் கருப்புக் கொடி பிடிக்கக்கூடாது என்று பாப நாசம் போலீஸ் சார்ஜ்கள் இன்ஸ்பெக்டர் கேட்டுக் கொண்டார். மேற்படி இடம், அய்யம்பேட்டை சப்-இன்ஸ்பெக்டர், ஹெட்-கான்ஸ்டேபிள், கழக முக்கியஸ்தர்கள் ஆகியோர் சேர்ந்தெடுக்கப்பட்டு அனைவரும் கொடுக்கப்பட்டு 24-10-53-ல ஊர்ஜிதமும் செய்யப்பட்டது.

27—10—53ல் சுமார் 2-30 மணிக்கு கழகத் தோழர்கள் 200 பேர்களுக்கு மேல், கருப்புக் கொடியுடன், போலீசார் ஏற்கனவே குறிப்பிட்ட (24—10—53) இடத்தில் நின்ற தோழர்களை, நீங்கள் இங்கு நிற்கக்கூடாது என்று சொல்லி, ஏராளமான போலீசுடன் கழகத் தோழர்களையும், செயலாளர்களையும் பலாத்காரமாக அழைத்துச் சென்று கவர்னர் வருகின்ற மெயின் ரோடிலிருந்து ஆயிரத்து ஐம்பது அடி தூரத்திலிருந்து, அங்கிருந்து கவர்னரைப் பார்க்க முடியாதபடி செய்துவிட்டார்கள்.

இதுபற்றி கேட்டதற்கு, "மேலிடத்து உத்தரவு, 300 அடி தூரம் தள்ளி இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகையால் நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை," என்று சொல்லிவிட்டார்கள்.

அதே நேரத்தில், அவர் போவதற்கு முன், ஒரு சில காங்கிரஸ் தோழர்கள் கூச்சல் போட்டுக் கொண்டு கொடிகளுடன் ஊர்வலமாகச் சென்றார்கள்.

கவர்னர் பாலம் திறக்குமிடத்திற்குச் சென்றவுடன் பிறகும், கழகத் தோழர்களை விடாமல் போலீசார் தடுத்துவிட்டார்கள்.

கவர்னர் பேசும்பொழுது, போலீசார் நடவடிக்கையைக் கண்டித்து, கொடி பிடித்தவர்களை அப்படி மறைத்துக்கொள்ளக் கூடாது என்றும், அவர்களை என் சமீபத்தில் அனுமதித்திருந்தால், நானும் அவர்களுடன் கலந்து பேசி, அவர்களோடு தருத்திருப்பேன் என்றும், அதனால் நல்ல பயனும் ஏற்படும் என்று சொல்லிவிட்டு, "போலீசாரைக் கண்டால் எனக்குக்கூட பயமாகத்தான் இருக்கிறது; 30 ஆண்டுகளுக்கு முன் என்னையும் இந்த மாதிரிதான் போலீசார் விரட்டி பிடித்தார்கள்; ஆனால், அந்த போலீசார் இப்பொழுது என்னைக் காப்பாற்றுகிறார்கள்; என்னைத் 'திரும்பிப்போ' என்று சொன்னவர்களிடம், நான் எங்கே போவது, நான் ஒப்புக்கொண்ட இடத்திற்குத்தான் வந்தேன் என்று சொல்லும், நீங்கள் வேண்டுமானால் காத்திருங்கள்; உங்களை நான் அங்கே வரவேற்கிறேன், எனக் கூறியிருப்பேன்," என்று குறிப்பிட்டார்.

அவர் பேசிய இருபது நிமிடத்தில் நம்மைப் பற்றியே அதிக நேரம் பேசினார்.

நமது கழகத் தோழர்கள் கட்டுப்பாட்டுடனும் கண்ணியமாகவும் நடந்துகொண்டார்கள். (ந—ி)

★

குடந்தையில் கவர்னருக்குக் கருப்புக் கொடி

குடந்தை, அக். 29—

28—10—53 புதன் பகல் 11 மணிக்கு சென்னை கவர்னர் பிரகாசா, குடந்தை நகராட்சி மன்றத்திற்குச் செல்லும்போது போர்டர்டவுன் ரோடு, மணிக்கூண்டுக்குப் பக்கத்தில் ஏராளமான தோழர்கள் நின்று கவர்னருக்குக் கருப்புக் கொடி காட்டினர்.

"பிரகாசாவே; புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெறு; ஆச்

சாரியார் மந்திரி சபையைக் கலைத்துவிடு; எங்கள் தலைவர்களை விடுதலை செய்," என்று எழுதியிருந்த தட்டிகளைப் பிடித்திருந்தனர்.

கருப்புக் கொடி நிகழ்ச்சி அமைதியாக நடைபெற்றது. திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், திருவிசலூர், கதிராமங்கலம், திருவையாறு, கருப்பூர், கழுக்குன்றம், அயிராவதேஸ்வரம், நாச்சியார் கோயில், வலங்கைமான், திருச்சேறை ஆகிய ஊர்களிலிருந்து தி. மு. கழகத் தோழர்கள் ஏராளமான பேர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சி முடிந்ததும், எல்லோருக்கும் தோழர்கள் கே. கே. நீலமேகம், என். கே. சாமி ஆகியோர் நன்றி கூறினர்.

★

நாகையில் கருப்புக் கொடி

நாகை, அக் 30—

29—10—53-ல், நாகையில், சென்னை கவர்னர் பிரகாசா நீலாயதாக்ஷி வீதி தேசிய உயர்நிலைப்பள்ளிக்கு வருகையில், தி. மு. கழகத் தோழர்கள் பலர், கருப்புக் கொடி காட்டி, "திரும்பிப்போ" என்று முழக்கமிட்டனர். நிகழ்ச்சி, குழப்பமின்றி அமைதியாக நடந்தது என்று அறிவிக்கப்படுகிறது.

* * *

எதிரொலி

29—10—53 காலை 8 மணிக்கு சென்னை கவர்னர் பிரகாசா காலைக்கு வந்தார். முனிசிபல் பெண் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் சமயம், தி. மு. கழகத் தோழர்கள் கருப்புக் கொடி காட்டி, தங்களின் அதிருப்தியைத் தெரிவித்தனர். நாகைப்பட்டினம் தோழர் மணி, அணியை அமைதியாக நடத்திச் சென்றார். தோழர்கள் தருவாரூர் மறைமலை, பொரடாச்சேரி வைத்தியலிங்கம், திருச்சி திராவிட பண்ணை முதலிய ஆகியோர் கருப்புக் கொடி நிகழ்ச்சியை அமைதிக்குலையாமல் நடத்தினர்.

திருவாரூரில், கவர்னருக்குக் கருப்புக் கொடி காட்டிய வந்தனை தோழர்கள்: விஜயராகவன், சுப்பிரமணியம், சோமு, முருகசாமி, கோவிந்தசாமி ஆகியோரை போலீஸ் சப்-ஜெயிலில் காவலில் வைத்திருக்கிறார்கள். டி. எம். பி அவர்கள் இருந்தபோதிலும் ஜாமீன் இருப்பதால், 2—11—53 அன்று ஜாமீனில் விடப்படலாம் எனத் தெரிகிறது.

✶✶✶✶✶✶✶✶✶✶✶✶

அண்ணாதுரை படத்திறப்பு விழா

விருத்தாசலம், நவ. 1—

நேற்று மாலை சட்டக்குடி பஞ்சாயத்து போர்டு கட்டிடத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களுடைய உருவப்படத்தை தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் திறந்துவைத்து, அண்ணாதுரை அவர்களின் சிறப்பைப் பற்றியும், நாட்டிற்கு அவர் செய்திருக்கும் சேவையைப் பற்றியும் சொற்பொழிவாற்றினார். விழாவிற்கு தோழர் எம். கந்தசாமி தலைமை தாங்கினார்.

✶✶✶✶✶✶✶✶✶✶✶

தோழர்

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ

சுற்றுப்பயணம்

5—11—53 புதுப்பட்டி (கம்பம்)
6—11—53 காங்கேயம் (தேர்தல் பிரச்சாரம்)
7—11—53 இராசிபுரம்
8—11—53 பெங்களூர்

திரு. வி. க. நினைவு நிதி

★

சென்னைத் தமிழ்ச் சங்கம் திரு. வி. க. நினைவு நிதி குழுவினர் அறிவிப்பது:

நினைவு நிதிக்காக இன்றுவரை வரவு:

முன் வரவு: 65 ஷில்லிங்கும், ரூ. 1319—10—0.

பூ. சா. கே. கோவிந்தசாமி, கோவை 100—0—0; தமிழ்ப் பேரவையினர், அரசினர் கலைக் கல்லூரி, கோவை 200—0—0; தமிழ், பி. எஸ். ஜி. கலைக் கல்லூரிக் கழகம், கோவை, 1015—11—6; தி. கு. நாராயணசாமி, பொதுவகப் பதிப்பகம், கடலூர், என். டி 100—0—0; எம். முனிசாமி, கோலமயிலாப்பூர், மயிலை 51—0—0; காந்தி ஆசிரமப் பயிற்சிக் கல்லூரி, (மாணவர்களும் ஆசிரியர்களும்) விரு. மலை 10—1—0; மு. பா. மங்கலம், அங்கயற்கண்ணி 5—0—0; நா. சண்முகம், பொற்றூர், சேலம் ஜில்லா 5—0—0; சில்லரை வரவு 0—0—0

ஆகமொத்தம்: 65 ஷில்லிங்கும் ரூ. 2807—6—6-ம் ஆகும்.

'நம் நாடு' ஏஜெண்டு தோழர்களுக்கு

"நம் நாடு" வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு: அக்டோபர் மாதத்திய பில்லை 31—10—53, 1—11—53-ம் தேதிகளில் அனுப்பியுள்ளோம். பழைய முறையில் பாக்கி இருப்பதைக் குறிப்பிடுகின்றோம். எல்லாப் பாக்கித் தொகைகளையும் இந்த 10—11—53-ம் தேதிக்குள் கிடைக்கும்படி அவசியம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். டிபாசிட் தொகைக்கு மேல் பாக்கியுள்ள தோழர்கட்கு "நம் நாடு" அனுப்புவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. "நம் நாடு" பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்பட்டும், கடைசிவரை பாக்கி தொகை அனுப்பாமலிருக்கும் தோழர்களின் பெயர், வரிசையாக "நம் நாடு" வில் தொடர்ந்து வெளியிடப்படும். வெளியூர் தி. மு. கழகத் (கிளை)களிலுள்ள தோழர்கள், ஏஜெண்டு பாக்கியை அனுப்பி வைக்கத் தூண்டுமாறு வேண்டுகிறோம். எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகளிடம் 'நம் நாடு' வாங்கிப் படிக்கும் தோழர்களும் இதுவரை தாமதியாமல் பாக்கி ரூபாயைக் கொடுத்து தி. மு. கழக நன்மைக்கும், 'நம் நாடு'வை ஆதரிக்க வேண்டுகிறோம். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களிலுள்ள நம் தோழர்கள், சந்தா தொகை அனுப்பி, "நம் நாடு" தபாலில் பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்.

இராயபுரம்,
சென்னை
2—11—53

பொறுப்பாளர்,
"நம் நாடு"

கல்வித் திட்டம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொஞ்சம் கற்றுக்கொள்வதற்குத் தேவையான போதனையை, அரைவிலும், தரத்திலும் குறைத்து தர முடியாது."

"இந்த இனத்திலும், மறுபடியும் முதல் மந்திரியின் கல்வித் திட்டத்தில், பணப் பிரச்னை புகுந்து இருக்கிறது. பண நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, செலவைச் சிக்கனமாக்க, புதிய கல்வித் திட்டம் புகுத்தப்பட்டது."

'ஆனால், மேற்கொண்டு எந்த வித வசதிகளும் இல்லாமல், அதே சம்பளத்தில், அதே குறைந்த பிரதிபலனில், இப்பொழுதுள்ள ஐந்து மணி நேர உழைப்பிற்குப் பதிலாக, இரண்டு முறைகளாக 6 மணி நேரம், வெவ்வேறு மாணவர்களிடம் தங்கள் முழு திறமையையும் செலுத்தி போதிக்க, இப்பொழுதுள்ள ஆசிரியர்களைத் திறமையாகச் செய்யச் செய்யலாம் என்பது அறவே முடியாத காரியம்."

"இப்பொழுது உள்ள வாழ்க்கைச் செலவு உயர்வில், தங்கள் குடும்பத்துக்குரிய பிரச்னைகளை மறந்து நினைக்காமலும், அந்த நாளை முழுதையும் படிக்கக் கழிப்பது என்பது கூட இல்லாமலும், மணிக்கணக்கில் அரைப்படியாக போதிக்க, ஆசிரியர்கள் நிறை மனதுடன் இருப்பார்கள் என்று நம்ப முடியுமா?"

"புதிய கல்வித் திட்டத்தில் உள்ள மாற்று போதனை முறையில் தரப்பட்டுள்ள மூன்று நான்கு மணி காலத்தில் பெண் மாணவச் சிறுமிகள் எந்தத் தொழில் மேற்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது?"

'தேவையான பணம் செலவழிக்க சர்க்கார் முன்வராத வரையில் எந்தத் திட்டமும் வெற்றிபெறாது; எந்தத் திட்டத்தையும் புகுத்தவும் கூடாது என்று நான் கருதுகிறேன்."

"தொடக்கக் கல்விக்கும், உயர்நிலைக் கல்விக்கும் செலவிடப்படும் பணம் இந்தக் காலத்தில் கூட இருந்தபோதிலும், தற்காலத் தேவைகளை அது பூர்த்தி செய்வதாக இல்லை. புதிய திட்டத்தின் கீழ் 7 ஆண்டு பள்ளி போதனையின் மூலம், 13 அல்லது 14 வயதை பெறுவதற்குள், வாழ வகைதெரிந்த தன்னம்பிக்கை உடையவர்களாக சிறுவர்களை மாற்றி விடலாம் என்று அவர்கள் நம்புவதாக எனக்குத் தெரிகிறது. இது நிறைவேறக் கூடியதா?"

உணவுகட்டுப்பாடு ஒழிக்கப்படுமாம்!

சென்னை அமைச்சர் அறிவிப்பு

சென்னை, நவ. 2—

சென்னை மாநிலத்தில் இவ்வாண்டு நல்ல மழை பெய்திருப்பதால் தானிய விளைச்சல் அமோகமாக இருக்குமென்றும், இதனால் பாக்கியுள்ள எல்லா உணவுக் கட்டுப்பாடுகளும் ரத்து செய்யப்படலாமெனவும் நேற்று மாலை, செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் பேசிய அமைச்சர் ராஜாராம் நாயுடு தெரிவித்தார்.

சர்க்கார் நியாயவிலைக் கடைகளை வைத்திருக்கும் வியாபாரிகளும், இனியும் 'கண்ட்ரோல்' வியாபாரத்தை எண்ணிக்கொண்டிராமல், வெளிப்படையான சாதாரண வியாபாரத்திற்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டுமென்றார். இக்கூட்டத்திற்குக் கவர்னர் பிரகாசா தலைமை வகித்தார்.

டெல்லி அழைப்பு: இலங்கை பிரதமர் மறுப்பு

கொழும்பு, நவ. 1—

இலங்கை இந்தியர் தகராறு பற்றி பண்டித நேருவைச் சந்தித்துப் பேச இலங்கை புதிய பிரதமர் கொத்தலாவலா டெல்லி வருவதற்கு மறுத்து விட்டார். டெல்லிக்கு வரும்படி நேரு அவருக்கு அழைப்பு அனுப்பியிருந்தார்.

அழைப்புக்கு கொத்தலாவலா பதில் தரும் வகையில், இலங்கையில் கள்ளத்தோணிகள் குடியேறுவதைத் தடுக்க இந்திய சர்க்கார் தங்களால் இயன்ற நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்று தமக்குத் திருப்தி ஏற்பட்ட பின்னர், தான் வருவதாக கொழும்பிலிருந்து சுமார் 75 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

டாக்டர் ஜகன் இந்தியா வருகை

லண்டன், அக். 31—

பிரிட்டிஷ் கயானா முன்னாள் பிரதமர் டாக்டர் ஜகன் இன்னும் சில நாட்களில் இந்தியாவுக்குப் புறப்படுகிறார். அவருடன் மக்கள் முன்னேற்றக் கட்சித் தலைவர் பர்ன்ஹாமும் வருவார்.

இந்தியாவில் பதினைந்து நாட்கள் தங்கி, இந்தியத் தலைவர்களை சந்தித்துப் பேசுவார்கள். ஏற்கனவே பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களுக்கு உதவி மறுத்திருக்கிறது.

பிரிட்டனில், தாங்கள் எதிர்பார்த்த அளவு ஆதரவு கிடைக்கவில்லை என்று டாக்டர் ஜகன் வருத்தத்துடன் கூறினார். தொழில் கட்சி கூட்டங்களிலெல்லாம் அமோக வரவேற்பு கிடைத்ததாகக் கூறினார்.

தேசிய ஏடுகள்

★

'சுதேசமித்திரன்' படப்பிடிப்பு!

"நாட்டின் நிர்வாகத் திறன் உயர்வதற்கு மொழிவழி மாநிலம் அமைப்பது அவசியமானதாகும்,"

என்று, பார்லிமெண்ட் சபாநாயகர் ஜி. வி. மாவ்லங்கர், இன்று, 35-வது மராட்டிய இலக்கிய மாநாட்டைத் துவக்கி வைக்கும்போது கூறினார். மாநாட்டிற்கு வி. டி. காட்டே தலைமை வகித்தார்.

மாவ்லங்கர் மேலும் பேசுகையில், "மொழிவாரி மாநிலம் ஏற்பட்டால், ஒவ்வொன்றின் நிர்வாகமும் அந்தந்தப் பகுதி மொழியைக் கொண்டு நடைபெறுமென்றும், மக்களின் நலனைக் கருதி பண்பாடுள்ள மொழிவழி மாநிலம் பிரிவது அவசியம்" என்று வற்புறுத்திப் பேசினார்.

"தாய்மொழி ஒன்றை மட்டும் கற்றால் போதாது என்றும், ஆங்

'பாரததேவியின்' பாதகம்!

ஆமதாபாத், அக். 31—

"இந்தியாவின் ஒற்றுமையை குலைக்கும்படியாக நாம் நடந்துகொள்ளக் கூடாது. இன்று மொழிவாரி மாநில அமைப்புக்குத் தூண்டுகோல். இவைகள் அதிகார வேட்கையால் ஏற்படும் சில்லறைச் சண்டைகள். இதனால் தேசத்தின் எதிர்காலம் இருளடையும்"

என்று, 36-வது மராட்டிய இலக்கிய மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில், இந்தியப் பார்லிமெண்ட் சபாநாயகர் ஜி. வி. மாவ்லங்கர் குறிப்பிட்டார்.

... பிறர் அனைவருக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்" என்றும் அவர் சொன்னார்.

'எகிப்தை விட்டு காலி செய்ய வேண்டும் பிரிட்டன்'

பெவானை ஆதரிக்கும் சப தர்ம ஏட்டின் அறிவிப்பு

லண்டன் அக். 30—

இங்கிலாந்து சோஷலிஸ்டு கட்சியின் இடதுசாரிகளான, அனூரின் பெவான் கூட்டத்தைச் சேர்ந்த 'டிரிபியூன்' ஆங்கில வார இதழ் 'எகிப்தை விட்டு பிரிட்டன் வெளியேற வேண்டும்' என்ற தலைப்பிட்டு ஒரு கட்டுரை தீட்டியுள்ளது.

'எகிப்தை விட்டு பிரிட்டன் வெளியேற வேண்டுமென்று பல மாதங்களாகச் சொல்லி வருவது போன்றே, டோரி கோஷ்டியினர், எகிப்தை விட்டு பிரிட்டிஷ் சிப்பாய்களை திரும்ப அழைத்துக்கொள்ளத்தான் போகிறார்கள்.'

'சென்ற வாரத்தில் டோரிகள் ஒரு இரகசிய கூட்டங்கூடி, பிரதமர் சர்ச்சிலும், வெளிநாட்டு அமைச்சர் ஆண்டனி ஈடனும், எகிப்துடன் ஒரு உடன்பாட்டிற்கு வர எடுத்த முடிவை ஆதரிக்கின்றனர்; சில டோரிகள் குறை கூறுகின்றனர்,'

"தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள பல டோரிகளுக்குத் துணிவில்லை. அமெரிக்காவும், ஐசனோவரும், வேறு சிலரும், ஒரு டோரிகள் தான் இது குறித்துப் பறைசாற்றினர்."

"மற்றவர்கள், இவர்களுடைய துணிவை வியந்தும், கருத்தை ஏற்றும் ஊமைகளாக இருந்துவிட்டனர்."

கோவை கலைக் கல்லூரியில் தோழர் கண்ணதாசன்

14—10—53ல், அரசினர் கலைக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் சார்பில் நடந்த கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு நாதன், எம். ஏ., எல். டி., தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையில், தமிழகத்தின் வரலாறு சரியாக எழுதப்படவில்லை என்றும், அப்படி எழுதப்பட்ட சிலவும் இறுதி நிலையை அடையாதிருக்கின்றது என்றும், வரலாற்றுப் புத்தகத்தில், வடநாட்டின் வரலாறே முன்னே பெற்றிருக்கிறது என்றும், அதை மாற்றி, தமிழகத்தின் வரலாறு முதன்மை இடம்பெற வேண்டுமென்றும் கூறினார்.

பின்னர், தோழர் கண்ணதாசன் அவர்கள் "இலக்கியம்" எனும் பொருள்பற்றி விரிவுரையாற்றுகையில், அகநானூறு, புறநானூறு இவைகள் தமிழர்களின் வாழ்க்கை நிலையை உணர்த்துவது என்றும், இலக்கியங்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் அமைதல் வேண்டுமென்றும் கூறினார்.

23—10—53ல், அரசினர் கலைக் கல்லூரி தமிழ்ப் பேரவையின் சார்பில், திரு விசுவநாதன், டாக்டர் மு. வரதராசனார் அவர்களிடம் ரூ. 200 அன்பளிப்பாகக் கொடுக்கப்பெற்றது.

நிதியளிப்புக் கூட்டத்திற்கு தோழர் சி. சி. வல்மீகநாதன், எம்.ஏ., எல்.டி., தலைமை வகித்தார். "சமய சாகரிகம்" எனும் பொருள்பற்றி டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

சிங்காநல்லூர் கோத்தாரி மில்

29-10-53ல், சிங்காநல்லூர் கோத்தாரி மில் கூட்டுக் கமிட்டி எல்லைப் பகுதி தொழிலாளர்களும் சேர்ந்து அமைக்கப்பட்டது. தோழர் என். கே. நடராசன் தலைமையில் செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

இது ஜனநாயகம்!

ஆசிரியர்: 'தென் நாடு'
சென்னை.

அதிகாலையில் கண்டுகளித்தபடியே 25—10—53 ஞாயிற்றுக்கிழமை மாலை, சென்னை பீச்சில் பார்க்கவிருக்கும் 'அசோக் விஹார்' என்னும் சுதந்திர விழாவின் 5-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, தலைமை வகிக்க வாக்களித்திருந்த சென்னை முதல் மந்திரி ஆச்சாரியாரிடம், தங்கள் குறைகளை மெயிலேயே சமர்ப்பிக்க ஆயத்தமாக நகர சபை அதிகாரிகளின் போக்கால் பாதிக்கப்பட்டு, அவதியுற்றிருக்கும் பலமுடியானவர், உடைந்த சாமான்கள் ஆகியவற்றை திருப்பிச் செய்யும் நிலைக்கு வெளிக் கடைக்காரர்களான சுமார் 60 ஏழை மக்களின் சார்பில் மனுவைச் சமர்ப்பிக்கக் காத்திருக்கையில், 29-10-53 மாலையே, சுமார் 4-45 மணிக்கு போலீஸ் உதவி கமிஷனர் வந்து ஜி. 2 திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷனில் பாதுகாப்பில் வைத்துவிட்டு, பிறகு சுமார் 3-15 மணிக்கு ஆச்சாரியார் வந்து போனபின் நிபந்தனையின்றி விடுதலை செய்துவிட்டனர். இதுதான் ஜனநாயக ஆட்சியா?

ஆரியசங்காரன், சென்னை.

★

அந்த 'புலவன்'

ஆசிரியர்: 'தென் நாடு'
சென்னை.

ஐயா,

பெண்களுக்கு மரியாதை கொடுப்பது நம் நாட்டில் மட்டுமல்ல; மேல்நாட்டிலும் கூட அது மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. அண்மையில் மறைந்த தமிழ்ப் பெரியார் திரு வி. கல்யாணசுந்தரனாரும் அவர் அளித்த 'பெண்ணின் பெருமை' எனும் ஒரு அரிய நூலை எழுதி வெளியிட்டார்கள் என்பது உண்மை. இவ்வாறிருக்க, சென்னையில் வெளியாகும், 'தினத் தந்தி' பத்திரிகை மட்டும், பெண்ணினத்தைத் தாழ்வுபடுத்தி எழுதுவது மிகவும் வருந்தத்தக்கது. சின்னாட்களுக்கு முன்: மந்திரிபதவியேற்றுள்ள தோழியர் ஜோதி அம்மையாரைக் குறித்து வெளியான செய்திகளெல்லாம், "ஜோதியம்மை பழநிக்குச் சென்றாள், அங்கு பழனி ஆண்டவரைத் தரிசித்தாள்" என்றெல்லாம் எழுதியிருக்கிறது. சப்தகிரிகாரர் செய்தி தயாரிக்கும் போதை இந்த வகையில் உள்ள மாதிரி சொன்னால் நன்றியுடையேன். இதைக்குறித்து அப்பத்திரிகையினருக்கும் ஓர் கடிதம் எழுதியுள்ளேன்.

அன்புள்ள,
மு. சீனிவாசன்,
சென்னை-1.

கைது செய்யப்பட்ட கயானா தலைவர்கள்

ஜியார்ஜ்டவுன், அக். 31—

கைது செய்யப்பட்ட கயானா தலைவர்கள் 5 பேர்களும் ஜியார்ஜ்டவுன் விமான நிலையத்திற்கருகிலுள்ள பெரிய பங்களாவில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை, நண்பர்கள், உறவினர்கள் வந்து பார்த்துவிட்டுப் போக எவ்விதத் தடையும் இல்லை. இவர்கள் இஷ்டப்பட்டவைகளை வாசிக்கவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

தி. மு. கழகத் துவக்க விழா

✯

ஒகளூர்

23—10—53ல், தோழர் சிற்றரசு சுப்ரமணியம் கொடியேற்றி வைத்து கழகத்தைத் துவக்கினார். தோழர் சி. பி. சிற்றரசு இன்றைய அரசியல் முறையைக் கண்டித்தும், தி. மு. கழகக் கொள்கையைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

தோழர்கள் எழிலரசன் செயலாளராகவும், முத்து துணைச் செயலாளராகவும், சிங்காரம் பொருளாளராகவும், மு. ராஜன் வட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியாக உண்டி வசூல் மூலம் சேர்ந்த ரூ 3-1-3 கல்லக்குடி போராட்டத்திற்காக தோழர் சி. பி. சிற்றரசு அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

கோபநாதம்பட்டி

18—10—53ல், கோபநாதம்பட்டியில், தி. மு. க. கிளைக் கழகம் தோழர் பி. எம். குப்புசாமி தலைமையில் துவக்கப்பட்டது. அதுசமயம், கிளைக் கழக நிர்வாகிகளாக தோழர்கள் கே. ஆர். குப்புசாமி செயலாளராகவும், வி. சக்கரசாமி துணைச் செயலாளராகவும், வி. சிவஞானம் பொருளாளராகவும், கே. ஆர். குப்புசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற் குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் கருப்பன், அர்ச்சுனன், மாணிக்கம் மூக்கன், சொக்கலிங்கம், மாணிக்கம், சின்னத்தம்பி, வெள்ளை, பூவன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலை ஒரு பொதுக் கூட்டம் தோழர் என். மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. எம். குப்புசாமி, என். சுந்தரம், ஆர். சபாபதி, வி. எம். கே. கண்ணையன், சி. எம். கே. நடராசன், தேவசிங், எச். எல். முருகேசன் ஆகியோர் தற்கால அரசியல் நிலை பற்றியும், தி. மு. கழகத்தின் கொள்கைகளைப் பற்றியும் பேசினர்.

எலந்தங்குடி

18—10—53-ல் எலந்தங்குடி கழகத் திடலில், தோழர் என். செட்டப்பா தலைமையில், தி. மு. கழகத் துவக்க விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சிவநாதன் கொடியேற்றினார். தோழர் கங்காதரன் இடக்கப் பண் பாடினார். தோழர்கள் வி. ஏ. பாண்டியன், முரசொலி ஆகியவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

சித்தார்பட்டி

18—10—53-ல், அன்று திடலில் (சாவடி முன்பு) தி. மு. கழகத் துவக்க விழா பொதுக் கூட்டம், தோழர் ஏ. வி. இராமசாமி தலைமையில் நடந்தேறியது. அவ்வமயம் தோழர்கள் எம். ஆர். கணேசன், என். பி. பாண்டியன், எம். என். பால்ராசு ஆகியோர் திராவிட நாடு பிரிவினை குறித்தும், தற்கால அரசியலின் போக்கைப் பற்றியும் பேசியபின், பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேறின.

குறிச்சிக்குளம்

2—10—53-ல், திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் தாலுக்கா, குறிச்சிக்குளம் திரு. வி. க. திடலில், தி. மு. கழகம் நிறுவப்பட்டது. அதுபோது தோழர்கள் கே. எம். சாமிநாதன் செயலாளராகவும், கு. பெ. இராமசாமி துணைச் செயலாளராகவும், ச. க. ஆதிமூலம் பொருளாளராகவும், கு. பெ. சிவகுருநாதன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

உணவுப் புளிப்பு சத்து தயாரிப்பதும் பம்பாயில்தான்!

உயிர்ச்சத்து பெருக்கத்திற்கு இது சிறந்த கூட்டு

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

✯

ஈரோடை

19—10—53 மாலை 7 மணிக்கு ஈரோடை காரைவாய்க்கால் மைதானத்தில், தி. மு. கழகச் சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. வீரகேசரி தலைமை தாங்கினார். தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பற்றியும், தோழர்கள் என். அப்பாவு, இ. எ. மதார்சா, சைது இப்ராஹிம், இரா. பரசுராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொல்லைக்கோம்பை

நீலகிரி, அக் 26-

25—10—53-ல், கொல்லைக்கோம்பையில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் கே. என். கலைபரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் நாவல செழியன், கழகத்தில் மும்முனைப் போராட்டங்களைக் குறித்து விளக்கினார். பின்னர் அருப்புக்கோட்டை முனிசிபல் சேர்மன் தோழர் எம். என். இராமசாமி நேருவின் பேச்சைக் கண்டித்து விரிவுரையாற்றினார்.

பழஞ்சூர்

பழஞ்சூரில், தி. மு. கழகச் சார்பில் 19—10—53 மாலை 6 மணிக்கு, ஓர் பொதுக்கூட்டம் தோழர் க. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் எம். எஸ். கலைச்செல்வன் தி. மு. கழகம் நடத்தி வரும் போராட்டங்களையும், ஆச்சாரியாரின் போக்கையும், காங்கிரஸ் சர்க்காரின் தர்பாரையும் விளக்கி விரிவுரையாற்றினார்.

அன்றிரவு 10 மணிக்கு, தோழர் கல்லதம்பி தீட்டிய "சதிகாரன்" என்ற நாடகம் கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

கடையநல்லூர்

25—10—53-ல், முத்துக் கிருட்டிணபுரம் திடலில் தோழர் ஐ. கந்தசாமி அவர்கள் தலைமையில், சொக்கம்பட்டி தோழர் ராஜகோபால் அவர்கள் இன்னிசையுடன் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. அன்பரசு, சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திண்டுக்கல்

25—10—53-ல், வ. உ. சி. திடலில், தி. மு. கழக சார்பில், தோழர் என். முத்து தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் பி. சமதர்மம், ப. நாராயணன் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுகையில், அந்தக்குடி தோழர்கள் சிறையில் படும் அவதியையும், சதி வழக்கு பற்றியும் விவரமாகப் பேசிவிட்டு, கல்வித் திட்டத்தை ஏன் எதிர்க்கிறோம் என்பதுபற்றி விவரித்தார்.

கூட்டத்தில் தூத்துக்குடி வழக்கு நிதிக்கு உண்டியல்மூலம் வசூலான ரூ. 3—7—0 தோழர் ஆசைத்தம்பி வசம் ஒப்படைக்கப்பட்டது.

• • •

அன்று மாலை 5 மணிக்கு, காங்கிரஸ் காலிகளால் இரவில் திருடிச் சென்றுவிட்ட கழகக் கொடியை தோழர் எம். நெப்போலியன் ஏற்றி வைத்தார்.

திருவிசநல்லூர்

19—10—53-ல், தி. மு. கழகக் கட்டிடத்தை, தோழர் சம்பந்தம், எம். எல். ஏ., திறந்து வைத்தார். பின்னர், அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய தெருக்கள் வழியாக வந்து, பட்டணித் தெருவில் பொதுக் கூட்டம் துவக்கப்பட்டது. தோழர் எஸ். சாமிநாதன் தலைமை வகித்து, திருவிசநல்லூரில் கழகம் அமைத்துள்ளதின் நோக்கம் குறித்துப் பேசினார்.

அடுத்து தோழர்கள் கே. ஆர். சம்பந்தம், எம். எல். ஏ., ஜி. நாராயணசாமி, டி. ஏ. இராமசாமி ஆகியோர் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய், அக். 30—

மக்களில் பெரும்பாலோரின் உணவில் குறைந்து காணப்படும், உயிர்ச் சத்துக்களைப் பெருக்குவதற்காக, மிக்க முக்கியமான கூட்டுப் பொருளாக உள்ள 'உணவுப் புளிப்புச் சத்தைத் தயாரிக்க ஒரு தொழில் நிறுவனத்தை நிறுவ, யூனியன் துணை மந்திரி கே. டி. மாளவியா பம்பாய்க்கு வந்து, பிரதம மந்திரியையும், சுகாதார மந்திரியையும் கலந்து ஆலோசித்து வருகிறார்.

ஊனுக்கு உரமளிக்கும் மாசத்தும், உயிர்ச் சத்தும் வெல்லப்பாகில் இருந்து உருவாக்க முடியும். சென்னையிலும், சில மாநிலங்களிலும், பரிசோதித்த வகையில் உணவு, புளிப்பு சத்து நல்லதோர் உயிர்ச்சத்தாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும், பம்பாய், ராஜஸ்தான் மத்திய மாநிலங்களில் இதுபற்றிய ஆராய்ச்சி செய்யப்பட இருக்கிறது.

40 லட்ச ரூபாய் மூலதனத்தில் துவங்கப்பட இருக்கிற தோரியம்—உரோனியம் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக திருவேம்பே பகுதியை, யூனியன் மந்திரி பார்வையிட்டார். அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மண்ணெண்ணெய் மாசு நீக்கும் தொழிற்சாலையையும் மந்திரி கண்டார்.

கொலாடா பகுதியில் நிறுவப்பட்டுள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சிக் கழகத்தையும், மத்திய மந்திரி கண்டுகளித்தார்.

தங்கத்தின் நிலைமை!

பாரிஸ், நவ 2—

பாரிசில், தங்கத்தின் விலை ஏகமாக இறங்கிவிட்டது. இதற்குக் காரணம், ரஷ்யா தன் தங்கத்தை விற்க ஆரம்பித்தது தான் என்று தெரிகிறது.

அருப்புக்கோட்டை

27—10—53ல், பாண்டியன் திடலில், தோழர் சிவசண்முகசுந்தரம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர். கணேசன், ஐயாசாமி, கமுதி இ. எல். எம். சௌந்திரபாண்டியன், அபிராமம் திராவிட தாசன், பி. சி. பிச்சை, பி. பி. என். கல்லதம்பி ஆகியவர்கள் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுப்பெற்று (24, குறுக்கு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம். ஏ.